# பாடம் 11 ஜூன் 6-12



# பின்னடைவுகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** மாற்கு 4:35–41; 5:21–34; ரோமர் 5:3–5; யோபு 19:23–27; 23:8–12; லூக்கா 24:13–27; ரோமர் 8:18,28.

**மனன வசனம்:** அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. ரோமர் 5:3–5.

ஒரு மாலைப் பொழுதில், சூரியன் மறைந்து கொண்டிருந்தபோது, ஒரு சிறுமி வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தாள். அப்போது கருமேகக் கூட்டம் சூழ்ந்து புயல் வீசத்தொடங்கியது. நீண்ட தூரம் செல்லவேண்டியிருந்ததால், வேகமாக நடக்க ஆரம்பித்தாள். ஒரு மழைத்துளி அவள் கன்னத்தில் விழுந்தது, பின் மற்றொன்று... அடுத்த கணமே மழையில் நனைந்துபோனாள். தன் வீட்டின் முன்கதவை நோக்கி ஓடினாள்; முன் ஜன்னல் வழியாக அவளையே பார்த்துக் கொண்டிருந்த அப்பாவும் அவளை நோக்கி வேகமாகச் சென்றார். அவளது தோள்களில் ஒரு போர்வையைப் போர்த்தியவாறே, ‘‘மழையில் நடந்துவந்தபோது, உன்னைப் பார்த்தேன். ஒவ்வொரு முறை மின்னல் வெட்டியபோதும், நீ ஓடுவதை நிறுத்திவிட்டு ஏன் மேலே நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தாய்?’’ என்று கேட்டார்.

‘‘அதுவா, தேவன் என்னைப் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தார், அதனால்தான் மேலே பார்த்தேன்’’ என்று சொன்னாள்.

வாழ்க்கையில் புயல்கள் வரும்போதும், தேவனுடன் நமது உறவில் சில பின்னடைவுகள் ஏற்படும்போதும் நமது எதிர்வினை என்னவாக இருக்கிறது? மழை நம் முதுகில் பலமாக அடிக்கும்போது, தலையைக் குனிந்து கொள்கிறோமா அல்லது தேவன் அங்கே இருக்கிறார் என்பதை அறிந்து, அவரை நம்பி அவரை நோக்கி நிமிர்ந்துபார்க்கின்றோமா?

இந்த வாரம், வாழ்க்கையானது சவாலாக இருக்கும்போது பொதுவாக நம்மில் வெளிப்படுகிற சில எதிர்வினைகளைப்பற்றி ஆராயப்போகிறோம். வாழ்க்கையின் பின்னடைவுகளை, நம்முடைய மிகமுக்கியமான உறவைப் பலவீனப்படுத்தாமல், அதை மேலும் பலப்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப்பற்றிச் சிந்திப்போம்.

***2026, ஜூன் 13 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# வாழ்க்கையின் புயல்கள்

கலிலேயாவின் கரையோரத்தில் அந்த நாள் முழுவதும் இயேசு மக்களிடம் பேசிக்கொண்டிருந்தார். அந்த வார்த்தைகள் மக்களின் மனதில் வெகுகாலத்திற்கு, ஏன் நித்தியம்மட்டும் எதிரொலிக்கவிருந்தன.

அன்று சாயங்காலத்தில், இயேசு தம் சீடர்களிடம் தம்முடன் வரும்படி அழைத்து, 'அக்கரைக்குப் போவோம் வாருங்கள்' என்றார். மாற்கு 4:35. வழியில் புயல் வரும் என்பது தெரிந்திருந்தும், போகலாம் என்று கூறினார். தமக்கு நெருக்கமான சீடர்களுக்கு ஒரு முக்கியமான வாழ்க்கைப் பாடத்தை வைத்திருந்தார். அடுத்து என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

**அந்தப் புயல்பற்றி மாற்கு 4:35-41இல் மீண்டும் வாசியுங்கள். இந்த வசனங்களிலிருந்து என்ன விசுவாசப் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?**

1. அந்தப் படகில் அநேகமாக அந்த ஒரு தலையணைதான் இருந்திருக்கவேண்டும், அதில் தலை சாய்த்து இயேசு உறங்கிப்போகிறார். மீன்பிடிப் படகுகளில் வழக்கமாக ஒரு தலையணைமட்டுமே இருக்கும்; படகின் பின்பகுதியில் அமர்ந்து படகை ஓட்டுபவர் அதன் மீதுதான் உட்கார்ந்திருப்பார். பின்பகுதியில் இருப்பவர்தான் படகை இலக்கைநோக்கிச் செலுத்துவார். ஆகவே, இங்கே இயேசுதான் 'படகோட்டியின்', ஆனால் அவரோ படகின் சுக்கானைப் பிடித்தவாறே தூங்கிவிடுகிறார்.
2. சீடர்கள் அனைவருமே படகோட்டுவதில் புதியவர்கள் அல்லர். பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் அனுபவம் வாய்ந்த மீனவர்கள். அவர்களுக்குக் கலிலேயக் கடலைப்பற்றி நன்றாகத் தெரியும், மேலும் புயலை எவ்வாறு கையாண்டு படகைச் செலுத்தவேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.
3. நற்செய்திப் பதிவுகளில் இயேசு தூங்குவதாக இங்குமட்டுமே வருகிறது. சீடர்கள் தங்கள் வாழ்க்கையிலேயே மிகமோசமான ஒரு புயலைச் சந்தித்து, மரணப்பயத்தில் நடுங்கிக்கொண்டிருந்த நேரத்தில், இயேசு படகின் பின்பகுதியில் நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்தார்.
4. நெருக்கடியான அந்த நேரத்தில் சீடர்களின் எதிர்வினை, 'உமக்குக் கவலையில்லையா?' என்பதாக இருந்தது. அவர்கள் இயேசுவின் குணத்தையும், தங்கள்மீது அவர் வைத்திருந்த அன்பையும் சந்தேகித்துக் கேள்விகேட்டனர். பெரும்பாலும், நாமும் கடினமான காலங்களை எதிர்கொள்ளும்போது நமது எதிர்வினையும் இப்படியே இருக்கிறது.

நம்பிக்கையே இல்லாத சூழ்நிலைகளில் அந்தச் சீடர்களைப்போல நம்மை நாமே காப்பாற்ற முயலலாம் அல்லது, நாம் வேதனையை அல்லது இழப்பை உணரும்போது தேவன் நம்மீது வைத்திருக்கிற அன்பையும் அக்கறையையும் சந்தேகித்துக் கேள்விகேட்கலாம். தேவன் ஒரு குறிப்பிட்ட வழியில்தான் செயல்படவேண்டும் என்று கருதுகிறோம். ஆனால், சீடர்களின் வாழ்வில் நடந்தது போல, வாழ்க்கைப் புயல்களின்போதுதான் தேவன் மிகப்பெரிய அற்புதங்களைச் செய்யமுடியும். அவர் மௌனமாகவும், தலையிடாமலும் இருப்பதுபோலத் தோன்றும்போது, நமக்குக் குழப்பமாக இருந்தாலும், தேவன் எப்போதும் உண்மையுள்ளவராகவே இருக்கிறார். அவர் நம்முடன் நம் புயல்களில் இருக்கிறார்; நம்மால் முடியாதபோது அவரால் அந்தப் புயலை அமைதிப்படுத்த முடியும்

---

**உங்கள் வாழ்க்கையில் புயலை எதிர்கொள்ளும்போது உங்கள் வழக்கமான எதிர்வினை என்ன? அத்தகைய தருணங்கள் தேவனோடுள்ள உங்கள் உறவை எவ்வாறு பாதிக்கின்றன? 2 கொரி 5:7-ன்படி நீங்கள் எப்போது வாழ்ந்திருக்கிறீர்கள்?**

# குணப்படு

கலிலேயக்கடற்கரையில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தைக் கற்பனை செய்து பாருங்கள். அதிகாலையிலிருந்தே இயேசுவின் வருகைக்காகக்காத் திருக்கிறார்கள். அவர் படகிலிருந்து இறங்கியதும், மக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு கப்பர் நகூம் கிராமத்திற்குள் அவரைப் பின்தொடர்கிறார்கள். திடீரென்று, ஜெப ஆலயத்தலைவனான யவீரு வந்து, தன் மகளைக் குணப்படுத்த வருமாறு இயேசுவிடம் கெஞ்சுகிறான்.

பல ஆண்டுகளாக உடல்நலமில்லாமல் இருந்த ஒரு பெண்ணும் அந்தக் கூட்டத்தில் இருந்தாள். அவள் பல மருத்துவர்களிடம் தன் பணத்தையெல்லாம் செலவழித்தும், 'சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்பட்டாள்' மாற்கு 5:26. கலிலேயாவின் இந்த மகத்தான மனிதரைப்பற்றிக் கேள்விப்பட்டதும், இதயத்தில் நம்பிக்கை துளிர்த்தது; தன்னிடமிருந்த எஞ்சிய பெலத்தைத் திரட்டிக்கொண்டு, தன் வீட்டிலிருந்து புறப்பட்டு, அங்கு வந்து சேர்ந்தாள். அவள் இயேசுவை நோக்கி மெல்லமெல்ல நெருங்கியபோது, மக்கள் நெரிசலால் மூச்சுத்திணறுவதுபோல இருந்தது. இறுதியாக, அந்தத் தள்ளுமுள்ளுக்கும் இடிபாடுகளுக்கும் இடையே, இயேசுவைக் கண்டுவிட்டாள். 'நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்' என்று தன்னை ஆறுதல்படுத்தினாள். மாற்கு 5:28.

**என்ன நடந்தது, நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? மாற்கு 5:21-34.**

இந்தச் சம்பவம், நோயுற்றவர்கள், தனிமையில் இருப்பவர்கள் மற்றும் கூட்டத்தில் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் போகிறவர்கள்மீது இயேசுவைத்திருந்த அக்கறையையும் இரக்கத்தையும் காட்டுகிறது. அன்று அநேகர் அந்த மக்கள் கூட்டத்தோடு சேர்ந்து இயேசுவின் அருகில் நெருங்கிச் சென்றுகொண்டிருந்தனர்; ஆனால் ஒரே ஒரு பெண்மட்டும்தான், தனக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக, குறிப்பிட்ட நோக்கத்தோடு இயேசுவைத் தொடத் தன் கையை நீட்டினாள். அந்தத் தொடுதல் அவளைக் குணமாக்கவில்லை; அவளுடைய விசுவாசம்தான் அவளைக் குணமாக்கியது. மாற்கு 5:34. மக்கள் கூட்டத்தின் தற்செயலான இடித்தலுக்கும், விசுவாசத் தொடுதலுக்கும் இடையிலான வித்தியாசத்தை இரட்சகராகிய இயேசு துல்லியமாக அறிந்துகொண்டார். இயேசுவின் வஸ்திரத்தில் விசேஷித்த வல்லமை எதுவுமில்லை; மாறாக, அந்தப் பெண்ணின் விசுவாசமும், அவரைத் தொடும்படி தன் கையை நீட்டுவதற்கு அவள் தீர்மானித்தும்தான் அவளைக் குணமாக்கியது.

அந்தப் பலவீனமான பெண்மணி, தனது வேதனையிலும் துயரத்திலும் அன்று அதிகாலையில் வீட்டிலேயே படுத்திருந்துகொண்டு, புறப்படாமல் இருந்திருக்கலாம். அதற்குப் பதிலாக குணமடைகிற நம்பிக்கையில் இயேசுவைத் தேடிச்சென்றாள். அவரைத் தூரத்தில் இருந்து காண்பதுமட்டும் போதாது என்று எண்ணி, இயேசுவின் அருகில் சென்றாள். இன்றும் அவ்வாறே நாமும் செய்யும்படி இயேசு அழைக்கிறார். 'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்' என்று சொன்னார். மத் 11:28,29.

மிகப்பெரிய தேவையில் இருந்த இந்தப் பெண்மணி ரோமர் 5:3-5இல் சொல்லப்படுகிற கருத்துகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறாள்?

# யோபு

வேதாகமத்தில் பின்னடைவுகளைச் சந்தித்த நபர்களில் யோபு முக்கியமானவர். தனது சொத்துக்கள் அனைத்தையும் இழந்தது மட்டுமல்லாமல் (யோபு 1:14-17), தனது பிள்ளைகளையும் (யோபு 1:18,19), ஆரோக்கியத்தையும் இழந்தார் (யோபு 2:7). அதன் பிறகு, அவருடைய மனைவி அவரிடம் தேவனைத் தூஷித்துவிட்டு மரிக்குமாறு வற்புறுத்தினாள். யோபு 2:9.

சில நாட்களுக்குப் பிறகு, யோபுவின் மூன்று நண்பர்கள் அவருடன் உட்கார்ந்து பேச வந்தனர். அவரது உருவத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்தவர்கள், அவருடன் ஏழு நாட்கள் பேசாமல் உட்கார்ந்திருந்தனர். யோபு 2:13. இறுதியில், பேசத் தொடங்கியபோது, யோபுவுக்கு ஏன் அப்படிப்பட்ட துயரநிலை ஏற்பட்டது என்பதற்கு மனிதரீதியான காரணங்களைச் சொல்லமுயன்றனர்; அதன் மூலம், தங்களை அறியாமலேயே அவருடைய துன்பத்தை அதிகப்படுத்தினார்கள். யோபுவின் வாழ்க்கையில் அவர் மனந்திருந்தவேண்டிய ஏதோ ஒரு மறைவான பாவம் இருக்கவேண்டும் என்று சொல்லி அந்த மூன்று நண்பர்களும் அவர் மீது குற்றம் சுமத்தினார்கள். யோபு 8,11,15. மேலும், 'அக்கிரமக்காரன் குடியிருந்த ஸ்தானங்கள் இவைகள்தான்; தேவனை அறியாமற்போனவனுடைய ஸ்தலம் இதுவே' என்றும் சொன்னார்கள். யோபு 18:21.

**அதற்கு யோபுவின் பதில் என்ன? யோபு 19:23–27; 23:8–12.**

துயரமான சூழ்நிலைகளில், அதற்கான காரணம் புரியாமல் இருந்தாலும், யோபு உண்மையுள்ளவராக இருந்தார். தேவனைக் குற்றஞ்சாட்டவோ சபிக்கவோ இல்லை. மாறாக, 'நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்' என்றார். யோபு 1:21.

அதே போராட்டத்தின் மத்தியில்தான் நாமும் வாழ்கிறோம். நாம் தேவனை அன்புள்ளவராகப் பார்க்காதபடி அதைச் சிதைக்கும் ஒரு திட்டத்தின் பகுதியாகவே, சாத்தான் நம்மை வேதனை, துன்பம், இழப்பு மற்றும் கஷ்டங்களால் வாட்டுகிறான். இத்தகைய நேரங்களில், நாம் இரண்டு வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்: ஒன்று, தேவன்மீது குற்றம் சுமத்தி அவரை நிராகரிக்கலாம்; அல்லது, நமது முழுப்பலத்தோடு அவரைப் பற்றிக்கொள்ளலாம். நம்மைச் சுற்றிலும் இத்தகையப் போராட்டங்கள் மும்முரமாக நடக்கும்போது, நித்தியத்தின் வெளிச்சத்தில், நமது இந்த நொடிநேரத் துன்பங்கள் தற்காலிகமான சோதனைகளே என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். 2 கொரி 4:16-18. இங்கே இப்போது நம் கண்ணுக்குத் தெரிகிற காட்சியில் சம்பந்தப்பட்ட அதிக விஷயங்கள் உள்ளன. ஒரு விசுவாசி சந்திக்கிற மிகப்பெரிய சவால்களில் ஒன்று, மிகவும் இருண்ட காலங்களிலும் தேவனை நம்புவதாகும். தேவன் தமது அன்பின் நிஜத்தைப் பல வழிகளில் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்கிற உண்மையை நாம் அந்தத் தருணத்தில் உணரமுடியாவிட்டாலும்கூட, நாம் உறுதியாகப் பற்றிக்கொள்ளவேண்டும்.

நீங்கள் இப்போது ஒரு கடினமான காலத்தைச் சந்தித்துக்கொண்டிருந்தால், தேவனிடம் ஓடுங்கள். உங்கள் வேதாகமத்தையும் ஒரு குறிப்பேட்டையும் எடுத்துக்கொண்டு, இயற்கையில் தேவனோடு நேரம் செலவிட வெளியே செல்லுங்கள். ரோமர் 5:3-5 வசனங்களை எழுதி, அதிலுள்ள செய்திகளைச் சிந்தியுங்கள். உங்கள் வாழ்க்கையில் தேவன் உங்கள்மீது வைத்துள்ள அன்பும் அக்கறையும்தான் மிகவும் உறுதியானது, நிலையானது என்பதை முழுமையாக நம்புங்கள்.

# எம்மாவு செல்லும் வழியில்

அந்த இரண்டு சீடர்களுக்கும் கடந்த சில வாரங்கள் மிகவும் சவாலானதாக இருந்தன. எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிநடை, தேவாலயச் சுத்திகரிப்பு, மேலறையில் நடந்த பஸ்கா விருந்து, கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் உருக்கமான ஜெபம், யூதாஸின் கொடூரமான துரோகம். விசாரணை, ஏளனம் மற்றும் சவுக்கடி. சிலுவையில் தொங்கிய இயேசுவின் காயம்பட்ட உடல் மற்றும் மதிய நேரத்து வானம் இருளடைந்தபோது அவர் தனது கடைசி மூச்சை விடுவதற்கு முன் பேசிய இறுதி வார்த்தைகள். தேவாலயத் திரைச்சீலை பலத்த சத்தத்துடன் கிழிதல். நீதிமான்களின் கல்லறைகள் திறக்கப்படுதல். ஓய்வுநாளுக்கு முன்பாக இயேசுவின் உடலைச் சிலுவையிலிருந்து மென்மையாக இறக்கி கல்லறையில் வைத்தது. அதன்பின் சீடர்களின் மனதில் எழுந்த குழப்பம், மனச்சோர்வு மற்றும் கேள்விகள். இவ்வளவு நடந்தும் எவ்வாறு புரிந்துகொள்ள முடியவில்லை?

இயேசுவைப் பின்பற்றினவர்கள் ஏமாற்றமும், அதைரியமும், குழப்பமும் அடைந்தார்கள். இது அவர்களது வாழ்க்கையில் மிகப்பெரிய பின்னடைவு. இது எல்லாக் காலத்தையும் உள்ளடக்கிய மாபெரும் சம்பவத்தின் ஒரு சிறு தருணம்மட்டுமே என்பதை உணரவில்லை. அவர்களில் இருவர் எம்மாவு ஊருக்குச் செல்லும் சாலையில் நடந்துசென்றபோது, இயேசு தோன்றி, அவர்களோடு நடந்தார்.

**லூக் 24:13–27-ல் உள்ள உரையாடலை வாசித்து, அதில் வரும் இரண்டு விதமான கண்ணோட்டங்களைப்பற்றிச் சிந்தியுங்கள்: அந்த இரண்டு சீடர்களின் கண்ணோட்டம் மற்றும் இயேசுவின் கண்ணோட்டம்.**

அவர்களது கண்கள் திறக்கப்பட்டதும், அந்த இரு சீடர்களும் அந்தச் சாலையில் தங்களுக்கு நடந்ததைப் பகிர்ந்துகொள்ள விரைவாக எருசலேமுக்குச் சென்றார்கள். லூக் 24:34-35. இயேசு வந்து, அவர்களுக்கு நடுவே நின்றதும், திகிலடைந்தார்கள். ‘நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன?’ என்று அவர் கேட்டதைக் கவனியுங்கள். லூக் 24:38.

இதுதான் இயேசு இன்று நமக்குச் சொல்கிற செய்தியும்கூட. பெரும்பாலும், நம் பள்ளத்தாக்கின் அனுபவங்களில் அவர் நமக்கு அருகிலேயே நடந்துவருவதை நாம் மறக்கிறோம். பெரும்பாலும் அவரை நாம் அடையாளம் காண்பதில்லை. அந்தக் குறிப்பிட்ட சூழ்நிலை சம்பந்தப்பட்ட வேறு பல விஷயங்கள் இருப்பதையும் பெரும்பாலும் நாம் உணர்வதில்லை. நம் வாழ்க்கை இயேசுவின் கரங்களில் பத்திரமாக இருப்பதை மறந்து, நம் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்ப அனுமதிக்கிறோம், கலங்குகிறோம். நம் வாழ்க்கையில் நிகழ்கிற காரியங்கள்பற்றி இயேசுவைவிட நமக்கு நன்றாகத் தெரியும் என்றும் பெரும்பாலும் யோசிக்கிறோம். லூக் 24:18.

கிறிஸ்தவர்களாகிய நாம் சவால்களையும் பின்னடைவுகளையும் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதுகுறித்து வேதாகமம் மிகச்சிறந்த ஆலோசனைகளை வழங்குகிறது. இந்தச் சிறு வேதப்பகுதிகளைத் தியானிக்க சிறிது நேரம் ஒதுக்குங்கள்: ரோமர் 8:28; பிலி 4:4-13; யாக் 1:2-4, 12; 2கொரி 12:9, 10. தியானத்தின் ஒரு பகுதியாக, இப்போது பின்னடைவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் ஒருவருடன் நீங்கள் பகிர்ந்துகொள்ளக்கூடிய மூன்று முக்கியச் செய்திகளை எழுதுங்கள். எழுதும்போது 2கொரி 1:4-ஐ நினைவில்கொள்ளுங்கள்.

# இயேசுவைப் பார்

அதைரியமான நிலையில் இயேசுவைப் பார்த்தால் நன்றாக இருக்குமே என்று யோசித்திருக்கிறீர்களா? இந்தக் கனவு உங்களைப் பற்றியது என்று யோசியுங்கள்:

"நான் முற்றிலும் மனமடிவுடன், என் கரங்களை கன்னத்தில் வைத்து இவ்வாறு யோசித்துக் கொண்டிருந்தேன்: 'இயேசு இந்தப் பூமியில் இருந்திருந்தால், நான் அவரிடம் சென்று, அவர் பாதத்தில் விழுந்து, என் வேதனைகளை எல்லாம் சொல்லுவேன். அவர் என்னைத் துரத்திவிடாமல், என்மேல் மனதுருகுவார், நான் எப்போதும் அவரை நேசிப்பேன், அவருக்குச் சேவைசெய்வேன்' என்று யோசித் துக் கொண்டிருந்தேன். அப்போது கதவு திறந்தது, அழகும் முகப்பிரகாசமும் உடைய ஒருவர் உள்ளே வந்தார். அவர் என்னைப் பரிவுடன் பார்த்து, 'இயேசுவைப் பார்க்க விரும்புகிறாயா? அவர் இங்கே இருக்கிறார், நீ ஆசைப்பட்டபடியே அவரைப் பார்க்கலாம். உன்னிடமுள்ள அனைத்தையும் எடுத்துக் கொண்டு என் பின்னே வா' என்று சொன்னார்.

"அதைக் கேட்டபோது எனக்குச் சொல்லமுடியாத மகிழ்ச்சி உண்டானது, என்னிடமிருந்த சிறு சிறு உடமைகளையும், விலைமதிப்பற்ற சிறுசிறு பொருட்களையும் எடுத்துக்கொண்டு, என் வழி காட்டியைப் பின்பற்றினேன். அவர் என்னைச் செங்குத்தான, பார்ப்பதற்குப் பலவீனமாகத் தெரிந்த ஒரு படிக்கட்டுக்கு அழைத்துச் சென்றார். நான் அந்தப் படிகளில் ஏற ஆரம்பித்தபோது, நான் மேலேயே பார்க்கும்படியும், இல்லையென்றால் தலைசுற்றி, கீழே விழநேரிடும் என்றும் சொன்னார். மேலே ஏறிக்கொண்டிருந்த பலர், உச்சிக்குச் செல்வதற்கு முன்னரே விழுந்தனர்.

"இறுதியில் நாங்கள் கடைசிப்படியிலும் ஏறி, கதவுக்குமுன் நின்றோம். நான் என்னிடம் வைத் திருந்த அனைத்தையும் விட்டுவிடுமாறு என் வழிகாட்டி என்னிடம் சொன்னார். நான் அவற்றைச் சந் தோஷமாக இறக்கிவைத்தேன்; பிறகு அவர் கதவைத் திறந்து, உள்ளே வரும்படி சொன்னார். அடுத்தக் கணமே நான் இயேசுவுக்குமுன் நின்றேன். அவர் இயேசுதாம் என்பதை அவரது சௌந்தர்யமான முகச் சாயலே காட்டியது. அவ்வளவு பிரகாசமான ஜொலிப்பும், கம்பீரமும் வேறு எவருக்கும் சொந்தமாக இருக்கமுடியாது. அவர் என்னைப் பார்த்தபோது, என் வாழ்க்கையின் ஒவ்வொரு சூழலும், என்னுடைய எல்லா உள்ளான உணர்வுகளும், எண்ணங்களும் அவருக்கு நன்றாகவே தெரியும் என்பது புரிந்தது.

"ஆராய்கிற அவரது பார்வையைச் சகிக்கமுடியாமல், அவரது பார்வையிலிருந்து என்னை மறைத் துக்கொள்ள முயன்றேன், ஆனால் அவர் புன்னகைத்துக்கொண்டே என் அருகில் வந்தார், தம் கரத்தை என் தலையின்மீது வைத்து, 'பயப்படாதே' என்றார். அவரது இன்னிசைக் குரலின் சத்தம், நான் இதுவரை அனுபவித்திராத மகிழ்ச்சியால் என் உள்ளத்தைப் பரவசமாக்கியது. சந்தோஷத்தால் ஒரு வார்த்தைகூட பேசமுடியவில்லை, சொல்லமுடியாத மகிழ்ச்சியால் நிறைந்ததால், பேச்சற்று அவரது பாதங்களில் விழுந் தேன். அங்கே நான் எதுவும் செய்யமுடியாமல் கிடந்தபோது, எனக்குமுன் அழகும் மகிமையுமான காட்சி கள் கடந்துசென்றன, பரலோகத்தின் பாதுகாப்பையும் சமாதானத்தையும் பெற்றதுபோல உணர்ந்தேன். வெகுநேரத்திற்குப் பிறகு என் பெலன் எனக்குத் திரும்ப வந்தது, எழுந்து நின்றேன். இயேசுவின் அன் பான கண்கள் இன்னும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தன, அவரது புன்னகை என் ஆத்துமாவை மகிழ்ச்சியால் நிரப்பியது. அவரது பிரசன்னம் என்னைப் பரிசுத்த பக்தியாலும், சொல்லமுடியாத அன்பாலும் நிரப்பியது...

"இந்தக் கனவு எனக்கு நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கொடுத்தது... தேவனை நம்புவதன் அழகும் எளிமையும், அறியாமை இருளில் இருந்த என் ஆத்மாவில் விடியலாய் மலரத் தொடங்கியது."

வாழ்க்கையின் பின்னடைவுகளுக்குமத்தியில், நாம் இயேசுவையும் தேவ னு டைய அன்புபற்றி அவர் வெளிப்படுத்துவதையும் பார்க்கவேண்டும்.

ரோமர் 8:18,28இன் வார்த்தைகளிலிருந்து இப்போதே நீங்கள் என்ன நம் பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும்?

# மேலும் படிக்க:

நாம் வாழ்க்கையின் சவால்களைச் சந்திக்கும்போதுதான் நாம் தேவனை அதிகமாகப் பற்றிக்கொள்ளவேண்டும். இந்தக் காலாண்டு முழுவதும் நாம் ஆராய்ந்த தலைப்புகள் அனைத்தும், தேவனோடுள்ள ஒரு வலுவான உறவைத் தக்கவைப்பதற்கும் அல்லது அதைப் புதுப்பிப்பதற்கும் உதவுகின்றன. ஆரோக்கியப்பிரச்சினை, நிதிநெருக்கடிகள், திருமண முறிவு, நெருக்கமானவரின் மரணம் அல்லது உங்கள் சந்தோஷத்தைக் கெடுக்கிற ஏதாவது பாரம் போன்ற ஒரு பின்னடைவை நீங்கள் சந்திக்கும்போது, பின்வரும் கேள்விகளை ஆராய்ந்து, இதுவரை படித்த பாடங்களை யோசித்துப் பாருங்கள்.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *நீங்கள் எதிர்கொள்ளும் அல்லது எதிர்கொண்ட பின்னடைவுகள் தேவனைப்பற்றிய உங்கள் பார்வையை எவ்வாறு பாதித்துள்ளன? தேவனுடைய உண்மையான தன்மையை நீங்கள் இன்னும் தெளிவாக எப்படிப் பார்க்கமுடியும்?*

2. *உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய சத்தம் எதிரியின் (சாத்தானின்) சத்தத்தைவிட பலமாக இருக்கவேண்டும் என்று நீங்கள் கடைசியாக எப்போது வேண்டினீர்கள்? யோவான் 10:10.*

3. *உங்கள் இருதயம் தாழ்மையாக இருக்கிறதா? தேவன் உங்கள்மீது வைத்துள்ள அன்பையும், தயவையும் தாழ்மையுடன் நம்புவதற்கு என்ன செய்யலாம்?*

4. *தினமும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் வாழ்கிறீர்களா? நீங்கள் சவாலான காலங்களைக் கடந்துசெல்லும்போது, நீங்கள் அவர்மீது முதலில் கொண்ட அன்பை அவர் புதுப்பிக்கவேண்டுமெனக் கேளுங்கள்.*

4. *தேவனே உங்களை ஆற்றுகிறவர், ஆலோசனை கொடுக்கிறவர், உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார் என்பதை நம்பி, சமீபத்தில் அவரிடம் எப்போது ஜெபிக்கச் சென்றீர்கள்?*

4. *உங்கள் விசுவாசம் பெலவீனமாக இருந்தால், 'ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்' என்று ஜெபியுங்கள். மாற்கு 9:24. உங்களை உற்சாகப் படுத்துபவர்களை உங்கள் அருகில் வைத்துக்கொள்ளுங்கள்; உங்களைச் சோர்வடையச் செய்பவர்களை அல்ல.*

4. *உலகம் எப்போதும் பலவீனமானவர்கள், அறியாமையில் உள்ளவர்கள், காயப்பட்டவர்கள் மற்றும் மனமுடைந்தவர்கள்மீது அக்கறைக் காட்டுவதில்லை. 'பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்' என்கிற தேவனுடைய செய்தி, மக்களின் வாழ்க்கையை ஆச்சரியமான முறையில் மாற்றக்கூடிய ஒரு செய்தி. 2கொரி 12:9. இன்று இந்தச் செய்தியின்மூலம் நீங்கள் யாரை உற்சாகப்படுத்தலாம்?*

**பாடச்சுருக்கம்:** நாம் இன்னும் வலியும் வேதனையும் நிறைந்த ஒரு பாவ உலகில் வாழ்கிறோம். நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒரு கட்டத்தில் கஷ்டங்களை எதிர்கொள்கிறோம். அவை தேவனுடைய அன்பைக்குறித்து நம்மை கேள்வி கேட்கத் தூண்டலாம். வேதாகமத்தில் உள்ள பல்வேறு நபர்கள் வாழ்க்கையின் பின்னடைவுகளை எதிர்கொண்ட விதத்தைப் பார்க்கும்போது, அத்தகையச் சூழ்நிலைகளில் நாம் செயல்படுகிற விதம் தேவனுடன் நம் அனுபவத்தைப் பெலப்படுத்தமுடியும்; தேவன் மாறாதவர், அவரது அன்பும் மாறாதது. மல் 3:6.

# வாழ்க்கையின் மிகமுக்கியமான பணி

லூயிஸ் லெகாடோம்பெஸி இந்தோனேசியாவில் ஞானஸ்நானம் பெற்ற அதே ஆண்டில், தன்னுடன் பிறந்தவர்களா ஏழு பேர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் கிறிஸ்துவிடம் அழைத்து வர ஒரு திட்டத்தைத் தீட்டினார்.

அந்தத் திடத்தை பின்வருமாறு செயல்படுத்தினார்: தனது ஞானஸ்நானத்திற்குச் சற்று முன்புதிருமணம்செய்துகொண்டார். தனது உறவினர்களுக்காகத் தினமும் தன்னுடன் சேர்ந்து ஜெபிக்குமாறு தனது மனைவியைக் கேட்டுக்கொண்டார். அவரும் அவரது மனைவியும் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கு வேதபாடம் நடத்தினர். பின்னர், அவர்கள் வசித்து வந்த அம்போன் தீவில் ஒரு செவந்த்–டே அட்வென்டிஸ்ட் ஆலயத்தில் நடைபெற்ற சுவிசேஷக்கூட்டங்களுக்கு அவர்களை அழைத்தார். அந்தக் கூட்டங்களின் முடிவில், அவரது மூத்த சகோதரி மற்றும் இரண்டு உறவினர்கள் உட்பட 13 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். பின்னர், மேலும் ஐந்து சகோதர சகோதரிகள் ஞானஸ்நானம் பெற்றனர். ஜெத் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்! மக்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்துவதே வாழ்க்கையின் மிகமுக்கியமான பணி என்று முடிவு செய்தார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு, அவர் ஒரு புத்தக ஊழியராகப் பணியாற்றினார், புத்தகங்களை விற்பனை செய்வதற்காகத் தீவுகளுக்குப் பயணம் செய்தார். ஆனால் கோவிட்–19 பெருந்தொற்று அவரது அந்தப் பணியை முடிவுக்குக் கொண்டு வந்தது

தனது எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, ஒரு தன்னார்வ வேதாகம ஊழியராகப் பணியாற்றவேண்டும் என்கிற உந்துதலை உணர்ந்தார். அவரது மனைவியும் அதற்குச் சம்மதித்தார், உடனே தனது உடன்பிறந்தவர்களின் இரட்சிப்புக்காகத் தான் முன்பு தீட்டிய திட்டத்தை மீண்டும் செயல்படுத்தினார். அவரும் அவரது மனைவியும் தங்களுக்குத் தெரிந்த ஒவ்வொரு நபரின் பெயரையும் ஒரு பட்டியலில் எழுதி, அதற்காகத் தினமும் ஜெபித்தனர். தங்கள் இரண்டு சிறிய குழந்தைகளுடன், தங்களது மோட்டார் சைக்கிளில் சென்று, அந்தப் பட்டியலில் உள்ளவர்களைச் நேரில் சென்று சந்திக்கத் தொடங்கினர்.

ஒரு புதிய வீட்டிற்குச் சென்றதும், ஜெத் தன்னையும் தனது குடும்பத்தையும் அறிமுகப்படுத்திக் கொண்டு, “நாங்கள் செவந்த்–டே அட்வென்டிஸ்டுகள்” என்று கூறுவார். வீட்டிலிருப்பவர்கள் ஆர்வத்துடன், “அட்வென்டிஸ்ட் என்றால் யார்?” என்று கேட்பார்கள். “அட்வென்டிஸ்ட் என்பவர்கள் ஓய்வுநாளில் கடவுளை வழிபடுபவர்கள்” என்று பதிலளிப்பார். அடுத்த கேள்வி தவிர்க்கமுடியாமல் இதுவாகத்தான் இருக்கும்: “ஓய்வுநாள் என்றால் என்ன?” அதற்கான விடையை இணையத்தில் தேடிப்பார்க்குமாறு ஜெத் அந்த வீட்டு உரிமையாளர்களிடம் பரிந்துரைப்பார். “சனிக்கிழமைதான் உண்மையான ஆராதனை நாள் என்பது உண்மையா?” என்று கேட்பார்கள்.



அப்போது ஜெத் தனது வேதாகமத்தைத் திறந்து அவர்களுக்கு வேதபாடங்களை நடத்த முன்வருவார். அடுத்த மூன்று ஆண்டுகளில், அவர்களின் ஜெபப் பட்டியல் 50 பெயர்கள் உடையதாகப் பெரிதாகியது. ஜெத்தும் அவரது குடும்பத்தினரும் வழக்கமாக ஒரு நாளைக்கு மூன்று குடும்பங்களைச் சந்திப்பார்கள். கிளாபட் பல்கலைக்கழகத்தில் ஜெத் இறையியல் படிக்கச் செல்வதற்கு முன்பே, அந்தப் பட்டியலில் இருந்த நான்கு பேர் ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். பிறகு, மேலும் மூன்று பேர் ஞானஸ்நானம் பெற்றனர்.